www.padippakam.com

# ஸ்ரீலங்காவின் நிலைமை பற்றியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியற் கடமை பற்றியும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

**Statement of the International Committee of the Fourth International on the Situation in Sri Lanka and the Political Tasks of the Revolutionary Communist League**

**November 19, 1987**

**DM 1,50**

படிப்பகம்

www.padippakam.com

*Printed in West Germany*
*Published by Neue Arbeiterpresse,*
*Alfredstr. 71, D - 4300 Essen 1*

படிப்பகம்

www.padippakam.com



1. இந்த நூற்றாண்டில் இடம் பெற்ற எண்ணற்ற துர்ப்பாக்கிய நிகழ்ச்சிகள் பின்தங்கிய நாடுகளில் உள்ள தேசிய முதலாளித்துவத்தின் தள்ளாத் தனத்தையும், வஞ்சகத்தனத்தையும் நிறுவிக்காட்டியுள்ளன. இவற்றிலே இந்திய, சிறீலங்கா ஒப்பந்தமும், இந்தியா சிறீலங்காவின் வடகிழக்கு மாகாணங்களிலே ஆக்கிரமித்ததும் ஒடுக்கப்பட்ட உழைப்பவர்களிற்கு கிடைத்த இன்னுமொரு கசப்பான அனுபவமாகும். ஜெயவர்த்தனாவதும் காந்தியதும் செயல்களிலே ஏதாவது முக்கியமானதென்றால் அவர்கள் இருவரும் இணைந்து செய்த வஞ்சனையும், கொடுமையும் தான். இந்தத் தேசிய முதலாளித்துவக் குப்பை கூழங்களான இந்தக் கொலைகாகாரர்கள் இரண்டுபேரும் செய்தது மறக்கவும், மன்னிக்கவும் முடியாதது. ஏகாதிபத்திய வால்பிடிகளான சியாங்கே சேக், சடாத், மொபுட்டு போன்றோருக்கு இவர்கள் குறைந்தவர்கள் அல்ல. ஜெயவர்த்தனாவதும் காந்தியதும் அரசியலானது தேசிய முதலாளித்துவத்தின் ஏதோ அற்ப சொற்ப முற்போக்குத்தனமென்ற பிரமைகளிற்குக்கூட முழுக்குப் போட்டுவிட்டதோடு இனிமேல் இவர்கள் இந்தியாவிலும் இலங்கையிலும் முற்போக்குப் பாத்திரத்தை வகிக்க மாட்டாது என்பதையும் உறுதிப் படுத்தியுள்ளது.

௨. பல தசாப்தங்களாக இந்திய முதலாளித்துவம் வெகுஜனங்களை மதிமயங்க வைப்பதற்கு மகாத்மாவின் காந்தியம் என்ற வரலாற்றுத் தப்பெண்ணத்தை அழகு படுத்தி ஆலாபரணம் பண்ணிய மகாத்மாவின் அரசியற் குள்ளத்தன மதப் போர்வையை வியூகமாகப் பாவித்து காங்கிரஸ் மேலதனச் சுறுக்களை அவற்றின் கோரம் தெரியாமல் பூசி மெழுகி வைத்துள்ளது. கூட்டுச் சேராமை என்ற துறவுப் போர்வையால் தன்னை மென்மையிலும் மென்மையானதாக உலகத்திற்குக் காட்டும் இந்திய பூசுவாசி உலகத்திலே நான்காவது பெரிய ஆயுதப்படையை ஆட்டிப்படைக்க வல்லதோடு மிக மௌனமாகவும் கொடுங்கோன்மையாகவும்

படிப்பகம்

www.padippakam.com



தெற்காசியாவிலே ஏகாதிபத்தியத்தின் நலனை மிக ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் ஜனநாயக உரிமைகளைத் தனது சொந்த நாட்டிலே விழுங்கி ஏப்பம்விட்டுப் பாதுகாக்கிறது. நாட்டின் விடுதலைக்காகப் போராடிய பொழுது, தான் சின்னப் பங்காற்றிய கௌரவங்கூட இல்லாத இலங்கை முதலாளித்துவம் வேண்டுமென்று புலிச் சூழலையும், விஜயன், துட்டகைமுனு, பராக்கிரம போன்ற கர்ண பரம்பரைக் கதைகளையும் தனது ஆதிபத்தியத்திற்கான உரிமையாக காரணம் காட்டுகின்றது.

3 1948 தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையை நசுக்கியது தொடக்கம், 1956 தமிழ்மொழிக்கான சம அந்தஸ்தை நிராகரித்ததூடாக, 1983 தமிழ் விரோதப் படுகொலை செய்ததோடு இன்று வடக்குக் கிழக்கு மாகாணங்களை, இந்திய முதலாளித்துவத்தினை ஆக்கிரமிக்க வரவழைத்ததான மாபெரும் சாதனையைச் செய்த ஸ்ரீலங்கா முதலாளித்துவம் தனது தொடர்ச்சியான இரத்தவெறிப் பாதகத்தை நியாயப்படுத்தத், தான்தான் இலங்கையின் ஒரேநாடான தனித்துவத்தை காப்பாற்ற பகீரதப் பிரயத்தனப் படுவதாகத் தொடர்ந்து கொக்கரித்தது. தமிழ் மக்களிற்கெதிரான யுத்தத்திற்குச் சிங்கள வெகுஜனங்களின் பேராதரவைப் பெறுவதற்காக இந்திய தேச விஸ்தரிப்பிற்கு, கடைசிக் தறியைத் தோண்டுகின்றது. சிங்களச்சாதி என்ற வெறிப்பிரசாரத்தின் மூலம் சிங்கள மக்களை இனவாதத்திற்குத் தூண்டியது. இந்த இலங்கை முதலாளித்துவம் கிராமப்புற வெகுஜனங்களிற்கு அத்தியாவசிய ஜீவாதாரப் பொருட்களை நிராகரித்ததோடு முதலாளித்துவக் கட்சிகளான UNP யும், ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியும் விவசாயிகளிற்கு தமிழ் விரோத நஞ்சை ஊட்டியது.

4 இதற்கிடையில் குள்ளத்தனம் வாய்ந்த புதுடில்லிச் சதிகாரர்கள் இலங்கைத் தமிழ்மக்கள் பாவம் என்று சொல்லி

படிப்பகம்

www.padippakam.com



மிகப் பிரபல்யமாக முதலைக்கண்ணீர் வடித்ததோடு தாமே சிங்கள இனக் கொலையைத் தடுக்கவந்த ஆபத்பாந்தவர்கள் என்று சொல்லி தமிழீழ விடுதலை இயக்கங்களின் அரசியலில் வீட்டோ அதிகாரத்தைப் பாவித்தார்கள்,

5 ஈற்றில் கொலைகார வர்க்க நலன் வழிநடாத்த ஆடிய நாடகங்கள் எல்லாம் அம்பலமாகியது. ஆனால் தெளிவற்ற தன்மையோடு, ஜெயவர்த்தனாவின் சிங்கள இனத்தின் தனித்துவம் காக்கும் தன்மையும் ராஜீவ் காந்தியின் தமிழ் மக்களின், விடுதலையைப் பாதுகாப்போம் என்பதும் எதிர்பார்த்த மாதிரியே உருக்குலைந்து கோணங்கி வேடமாகி இருவரும் இராணுவ ஐக்கியம் ஏற்படுத்தி எந்த மக்களிற்காக தாம் பரிந்து பேசினார்களோ, அந்த அதே மக்களுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்கிறார்கள். ஜெயவர்த்தனா வடகிழ் மாகாணங்களை எல்லையற்ற காலத்திற்கு இந்திய இராணுவத்திடம் ஒப்படைத்து விட்டார். தமிழ் மக்களை நரபலி வேட்டையாட நான்கு வருடங்களாகப் பாவித்த இலங்கை இராணுவம் இன்று வறிய சிங்களத் தொழிலாளர்களையும், விவசாயிகளையும் நசுக்கத் தெற்குக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தியர்களுக்கு, தமிழ் மக்களைப் பாதுகாப்பதென்பது, அவர்களைக் பூண்டோடு ஒழிப்பதற்கான தாக்குதலைத் தொடுப்பதாகி விட்டது. இந்தியர்களின் செயல்களானது எவ்வாறு அமெரிக்கப் படைகள் வியட்னாமில் HUE (கியூ) பிரதேசத்தைத் தரைமட்டமாக்கிய போது ஒரு நகரத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் சில வேளைகளில் அழிக்க நேரிடுகின்றது என்றார்களோ, அதேபோல் இருக்கின்றது. இப்படியே இந்தியர்களும், ஒரு தேசிய இனத்தைக் காப்பாற்ற அந்த இனத்தின் மக்களையே பூண்டோடு அழிக்கிறார்கள்.

6 ஸ்ரீலங்கா முதலாளித்துவத்தின் செயல்களை எத்தனையோ வரலாற்றுச் சம்பவங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். இதற்கு

படிப்பகம்

www.padippakam.com



இதற்கு ஒப்புவமையாக நாம் கடந்தகால புரட்சிகர வரலாறுகளிற் காணமுடியும். தங்களிற்குள்ளே போர் செய்துகொண்டிருந்த பிரெஞ்சுப் பூசுவாக்களும், பிறெஸ்சியப் பூசுவாக்களும் 1871ல் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த பரிஸ் தொழிலாளர்களை நசுக்குவதற்காக ஐக்கியப் பட்டார்கள். இந்தச் சம்பவத்திற்கு 46 வருடங்களிற்குப் பின்பு கெறென்ஸ்கி போல்சுவிசப் புரட்சியை நசுக்குவதற்காக பெற்றோகிறாட்டை ஜேர்மனியிடம் தாரைவார்க்க முற்பட்டான். ஜெயவர்த்தன சதியிலிருந்து கற்கும் பாடம் என்னவெனில் தேசிய முதலாளித்துவத்தின் "தேசபக்தி" எதும் அர்த்தமற்றதாகும். அது முதலாளித்துவப் பேராசையின் பலவீனமான வெளிப்பாடாகும். அது எப்பொழுதும் வர்க்க வாஞ்சையின் அத்தியாவசியத்திற்கு அடிபணிந்தது. சிறீலங்கா பூசுவாசியின் ஆட்சியானது வட கீழ் மாகாணத்தில் இந்திய ஆக்கிரமிப்பும் தெற்கிலே தமிழ் விரோத இனவாதமும் என்ற இரு தூண்களிலேயே நிலை கொண்டுள்ளது. இந் நிலைமைகள் ஒரு வரலாற்று உண்மையை வெளிப்படுத்துகின்றன. அதாவது ஒரு நாட்டினுள்ளே தேசிய இனங்களினதும், மதக் குழுக்களினதும் உண்மையான சமத்துவம் என்பது பாட்டாளி வர்க்கத்தால் தலைமை கொடுக்கப்பட்ட சோஷலிசப் புரட்சியால் மாத்திரம் தான் நிர்ணயிக்க முடியும் என்பதாகும்.

7. காந்தி ஜெயவர்த்தன சதியானது இந்திய உபகண்டத்தில் உள்ள தேசிய முதலாளித்துவத்தின் அக்கிரமத்தை அம்பலப்படுத்துவதோடு இந்தப் புதிய அனுபவமானது குட்டி முதலாளித்துவ தேசியவாதத்தின் வங்குரோட்டுத் தனத்தை வெளிப்படுத்துகிறது. அதாவது இது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கக் குட்டி முதலாளித்துவத் தேசியவாதம் லாயக்கற்றதென்பதை இது நிறுவிக் காட்டியுள்ளது. வரலாற்று நெருக்கடியான காலகட்டங்களிலே முழு மக்களினதும் தலைவிதி தத்தளித்துக் கொண்டிருக்கையிலே மற்றவர் மனம்

படிப்பகம்

www.padippakam.com



புண்பட்டுப் போமேயென்று யோசிப்பதற்கு இடமேது. LTTE இன் நிலைமையைப் பற்றியோ, அதன் போராளிகளின் தலைவிதியில் அனுதாபங் கொண்டோ சொல்ல வேண்டிய உண்மையைச் சொல்லாமல் மன்னித்து மறந்துவிட முடியாது. யூலை 29, 1987ல் இருந்து தேசிய விடுதலை பெரிய பின்னடைவிற்குச் சென்றதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் கொள்கைகளே பிரதான பொறுப்பாகும்.

8 பிரபாகரன், தான் புதுடில்லிக்குப் பறக்க யோசித்ததும், இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்றதும், இந்தியாவினது தந்திரத்தினதும் கபடத்தினதும் விளைபொருள் என்கின்றார். இந்தச் சாக்குப்போக்கு LTTE இன் சின்னத்தனத்தையும் குட்டி முதலாளித்துவத் தேசிய வாதத்தின் ஆண்மையின்மையையுமே அம்பலப்படுத்துகிறது. LTTE இன் தலைவர் ஏன் காந்தியினால் ஏமாற்றப்படக் கூடியவராக இருந்தாரென்றால், அதாவது முழு அரசியலுமே தமிழீழத்தின் சுய நிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கு இந்திய முதலாளித்துவத்தை வருந்தி அழைத்து உதவி செய்யும்படி கேட்ட அரசியலின் அடித்தளத்திலே ஆனதாகும். முதலாளித்துவத் தேசிய வாதத்தின் வர்க்க முன்னோக்கும், வர்க்க வேலைத்திட்டமுமே இந்தப் பேரழிவைக் கொண்டுவந்த தவறான எடைபோடலின் ஊற்றிடமாகும். 70 வருடத்திற்கு முன்பு லெனின் எச்சரித்தது போன்று ஓர் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் முதலாளித்துவத்தின் தேசிய சுயநிர்ணய உரிமை பற்றிய எண்ணக்கரு என்னவெனில் தனக்கென்று பிரத்தியேக சலுகைகளைப் பெறுவதும் சுதந்திரம் அடைந்த நாட்டிலுள்ள தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தான் தனித்துச் சுரண்டுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்துவதுமாகும். இத் தன்னலத் தன்மையானது முதலாளித்துவ வர்க்கக் குணம் என்று நிதர்சன வேரிலிருந்து தொடங்கி கூலி உழைப்பிலுள்ள உபரிப்-

படிப்பகம்

www.padippakam.com



பெறுமானத்தை உறுஞ்சியெடுப்பதென்ற அடிப்படையில் தங்கியதால் தொழிலாளி வர்க்கத்தை அடக்கியாள்கிறது. முதலாளித்துவத் தேசிய வாதத்தின் எல்லாக் கன்னைகளின் கொள்கைகளையும், LTTE போன்ற றடிகல் போக்குகளின் கொள்கைகளையும் இந்த வர்க்கக் காரணிகளே வழிநடாத்துகின்றன. அவர்களின் அரசியல் வதன சாஸ்திரங்களை இந்த வர்க்கக்காரணிகளே தீர்மானிக்கின்றன. எவ்வாறு அடியிலும் முதலாளித்துவத் தேசியவாதிகள் விடுதலைப் போராட்டம் தங்கள் கைப்பிடிகளிலிருந்து நழுவி முதலாளித்துவ ஆட்சிக்கு விரோதமாக மாறாமல் காத்துக் கொள்வார்கள்.

9. ஒடுக்கப்பட்டதும் பின்தங்கியதுமான நாடுகளிலுள்ள பூர்சுவாக்கள் தங்களது தேசியத்தை ஏகாதிபத்திய ஒடுக்குமுறை நுகத்தடியிலிருந்து விடுவிக்கக் கூடிய மட்டத்திற்கு சர்வ வியாபகத் தன்மை பெற அதாவது விடுதலையைப் பூர்த்திசெய்யத் தேவையான சர்வாம்சத்தையும் பூர்த்திசெய்ய இயல்பிலேயே லாயக்கற்றவர்கள் ஆதலால் அவர்கள் ஒடுக்கப்பட்ட வெகுசனங்களை அணிதிரட்டிக் கிளர்ந்தெழச் செய்வதை மட்டுப்படுத்திவிடுவார். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஒக்டோபர் 16, கம்கருமாவத்தை ஏட்டிற் சரியாகக் கூறியாங்கு; தேசியப்புறனிங்கல் வாதத்தையும் ஒன்றின் தனியுரிமையை அடையும் இலக்கையும் மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட ஓர் இயக்கத்தால் ஒருநாளும் தேசிய விடுதலையை அடைய முடியாது எங்களது சகாப்தத்தில் அப்படியான இயக்கமும் அது எவ்வளவு பெரிய வெகுஜன ஆதரவைப் பெற்ற இயக்கமாக இருந்தாலும் முதலாளித்துவ நாடுகளிடையே தனிமைப்படுத்தப்பட்டு விடும். ஒரு பிரத்தியேக ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் விடுதலை இயக்கமானது திறந்த மனத்தோடு ஜனநாயகத்திற்காகப் போராடும் இயக்கத்தின் பகுதியாயும், முழுதாயும் இயங்கிச் சென்றால் மாத்திரமே முன்னேறிச் செல்ல முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



"தேசிய புறனீங்கல்வாதம் நேர் ஒடுக்கப்பட்ட இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பரிபூரண ஜனநாயகத்திற்கான போராட்டத்தின் பகுதியும் முழுமையும் ஆவதைத் தடைசெய்யும். இது ஏன் இப்படி நிகழ்கிறதென்று பார்க்குமிடத்து இதன் கடைசி ஆய்வு வெளிப்படுத்துவது என்னவெனில் தேசியப் புறநீங்கல் வாதமானது தேசிய முதலாளித்துவம் தனது சொந்த நாட்டுத் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் சுரண்டும் பிரயத்தனத்தோடு பின்னிப் பிணைந்தது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆண்மையின்மையின் ஊற்றிடம் இதுவேயாகும்.

10. இந்திய ராணுவம் பெரும் கொலைகளைச் செய்தபோதான இலங்கை இந்திய ஒப்பந்தத்தை LTTE ஏற்றதன் பின்பு, மீண்டும் காந்தி அரசாங்கத்தின் விட்டதைத் தொட்டதைப் பொறுக்கவுதற்கு LTTE முண்டியடித்து ஓடுகிறது. இந்திய இராணுவத்தின் இனக்கொலைச் சம்பவத்தை அடுத்து ஒக்டோ-பர் 14, பிரபாகரன் அறிக்கை வெளியிடும் பொழுது இந்த இனக்கொலை நிகழ்ச்சி தப்பபிப்பிராயத்தால் ஏற்பட்டது என்று பாசாங்கு செய்தார். அவர் காந்திக்கு அனுப்பிய செய்தியில் "அரசியற் தலைவிதியை நிர்ணயிக்கும் ஜனநாயக சுதந்திரம் உள்ள மக்கள்மேல் இந்தியா போன்ற ஜனநாயக நாடு தனது விருப்பத்தைத் துவக்கு முனையிலே திணிப்பது வியப்பா-னது." என்று கூறினார். இந்திய ஜனநாயகம் பற்றிய பிரபா-கரனது ஸ்தோத்திரங்கள் குழந்தைப் புத்திக்கான சிறந்த உதாரணமாகும். இது தமிழ் வெகுஜனங்களை ஏமாற்றும் கபடம் நிறைந்ததாகும். இதன் நோக்கு கொழும்பு, டெல்லி யாழ்ப்-பாணத்திலுள்ள தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது வர்க்க எதிரிக்கெதிராக சுயாதீனமாகக் கிளர்ந்தெழுவதை வேண்டுமென்று

www.padippakam.com



தருப்பதாகும்.

11 தேசிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை LTTE பெறத் தவறியதால் அந்த உரிமை நிறைவேற முடியாத உரிமை ஆகிவிட வில்லை. அன்றேல் அப்படி ஒரு கோரிக்கைக்காகப் போராடுவது பிரயோசனம் அற்றதாகியும் விடவில்லை. இது; தேசிய ஜனநாயகப் போராட்டமானது ஒடுக்கப்பட்ட நாட்டின் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தோடு பின்னிப் பிணைந்தவையே நிறுவிக் காட்டுகிறது. தீர்க்கப்படாத மற்றைய ஜனநாயகக் கடமைகளோடு தேசிய சுய நிர்ணய உரிமையையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் மாத்திரந்தான் அடைய முடியும். நான்காமகிலத்தின் இந்த வரலாற்று முன்னோக்கானது ஸ்ரீலங்காவிலுள்ள சிங்கள, தமிழ் மக்களின் 40 வருட அனுபவத்தால் மீண்டும் நிறுவிக் காட்டப்பட்டுள்ளது. கடந்த கால் நூற்றண்டாய்ப் பப்லோ வாதத் திரிபுவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கைச் சமசமாஜக் கட்சியின் வரலாற்றுத் துரோகம் இல்லையெனில், தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமும் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டமும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிபட்டிருக்க மாட்டாது. 1964 பண்டார நாயக்கா கூட்டரசாங்கத்திலே LSSP சேர்ந்தது வர்க்கப் போராட்டத்தினதும், தேசிய விடுதலைப் போராட்டத்தினதும், திருப்பு முனையாகும். இந்த வரலாற்றுத் துரோகத்திற்கு முன்பு தமிழ் மக்கள் தொழிலாளி வர்க்கத்தை தலைமைக்காகப் பார்த்துக் கொண்டிருந்ததோடு ஸ்ரீலங்கா முதலாளித்துவத்தைப் பாட்டாளி வர்க்கம் தூக்கி எறிந்தவுடன், இன ஒடுக்கு முறையும் ஒழிந்துவிடும் என்று நம்பியிருந்தார்கள். இதை 1953 கர்த்தாலிலும் 1963-64 21 அம்சக் கோரிக்கைப் போராட்டங்களிலும் நிதர்சனமாகக் காணக்கூடியதாக இருந்தது.

படிப்பகம்

www.padippakam.com



64இலிருந்து 72க்கு முற் நிலைமைகளும் மாறியதோடு LSSP பூர்சுவா வரைக்குள் அரசாங்கத்துள் அங்கம் வகித்ததோடு தேசிய ஒடுக்கு-முறையை ஸ்தாபனப்படுத்திய அரச சட்டத்தை உண்டாக்கவும் பங்காளியாகியது. LSSP ஆற் துழக்கி எறியப்பட்ட தமிழ் மக்கள் முதலாளித்துவத் தேசியவாத அரசியலுக்குள் வாரி அள்ளப்பட்டுச் சென்றனர்.

12. LSSP யின் துரோகம் எவ்வாறாக இருந்தாலும் முதலாளித்-துவத் தேசியவாதக் குட்டிச்சுவரில் முட்டி நிற்பதிலிருந்து மீழ்வதற்கான முன்னேற்ற தமிழ் சிங்களப் பாட்டாளிவர்க்கத்தின் ஐக்கி-யப்பட்ட போராட்டம் ஒன்றேயாகும். இந்திய ஆக்கிரமிப்பானது தமிழ்த் தேசிய இனத்தின் ஒடுக்கு முறைக்கும் தெற்கிலுள்ள சிங்கள வெகுஜனங்களின் ஒடுக்கு முறைக்குமான வர்க்க அடித்தளத்தை அம்பலப்படுத்தியதோடு, வர்க்கப் போராட்டத்தையும், தேசிய விடு-தலைப் போராட்டத்தையும் சிங்களத் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தின்கீழ் ஐக்கியப்படுத்த வேண்டிய அத்தியாவசியத்தையும் கொண்டுள்ளது. இது திட்டவட்டமாக ஐக்கிய சோஷலிச தமிழீழ ஸ்ரீலங்கா பதாகையை உயர்த்துமபடி பணிக்கிறது.

13. அழுகின்ற முதலாளித்துவ அரச அமைப்பு முறைக்குள்-ளும் அவர்களின் செயற்கையான தேச எல்லைகள் என்ற சவப் பெட்டிக்குள் திக்குமுக்காடித் திணறுவதைத் தவிர வெகு-ஜனங்களின் தேவைகளோ ஜனநாயக உணர்வுகளோ திருப்-திப்படுத்தப் படுவதில்லை. இரண்டாம் உலகயுத்தம் முடிந்ததிலி-ருந்து நாடு உள்ளடக்கியுள்ள வெவ்வேறுவிதமான மொழி, மத, இனக் கூறுகளின் உண்மையான ஜனநாயக சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தனித் தேசியமுண்டாக்க ஏகாதி-பத்தியம் விட்டது கிடையாது. மாறாக ஏகாதிபத்தியத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட விடுதலை என்பது ஜனநாயகக் கொள்கைகளின்

படிப்பகம்

www.padippakam.com



கேவலமான சமரசத்தின் அடிப்படையில் அமைந்த வம்பிறந்த அரசுகளாகும். இந்த அரசுகளின் உருவாக்கத்திலுள்ளோ தேசிய-முதலாளித்துவம் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களை விடுதலை செய்-யும் பாத்திரத்தை வகுக்காமல் ஏகாதிய மண்கொள்ளைக்காரர்-களின் இளையபங்காளியாகவே செயற்பட்டார். இப்படி உருவாக்கப் பட்ட அரசுகள் அழுகின்ற முதலாளித்துவத்தின் மடியல் விடகவே இருக்கின்றதேயொழிய உற்பத்திச் சக்திகளின் முற்போக்கான அபி-விருத்தி அதற்குள்ளோ முடியவே முடியாததாகும்.

14. ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் கீழ் உள்ள இந்தப் பூசுவா அர-சுகளிலுள்ள பின்விளைவுகள் முன்விளைவுகள் அனைவரும் அறிந்ததே. இந்த நாடுகளில் தொடர்ந்து உயிர்வாழக்கூடிய நேர் உள்நாட்-டுத் தொழிற்சாலையை அமைக்க முடியவில்லை, இவைகளின் பொருளாதாரத் தலைவிதி சில மூலப் பொருட்களை ஏற்றுமதி செய்-வதோடு மாத்திரம் விலங்கிடப்பட்டு மீண்டும் திருப்பிச் செலுத்த முடியாத மீளாக் கடனிலும் ஆறாத் துயரிலும் பூதாகார-மான எழுத்தறிவின்மை, நோய் நொடி, கோள் குண்டணி, பஞ்சம் பசி பட்டினிச் சாவு என்பவையையே நித்திய வரமாகப் பெற்-றுள்ளன இந்தப் பின்தங்கிய நாடுகள். எங்காவது அருமை பெருமையாக உள்நாட்டுத் தொழிற்சாலை உருவாக்கப்பட்டி-ருந்தால், இவையும் பிரத்தியேகமாக ஏகாதிபத்தியத்தால் அடக்கியாளப்படும் பல்நாட்டு உற்பத்தியின ஒரு பாகமா கவும் ஏகாதிபத்திய அதீத லாபத்தைச் சுரண்டும் ஊற்றி-டமாகவுமே இருக்க முடியும். இந்தப் போலிப் பொருளாதார அபிவிருத்தி ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களின் எந்தத் தேவை யையும் குறைநிறைவு செய்யப் போவதில்லை. இந்தப் பிரச்-சனைகளின் மத்தியில் ஏகாதிபத்தியத்தின் வாழ்த்தி வரங்கொ-டுத்தலோடும், எக்காள முக்காளச் சிரிப்போடும், பெருக்கெடுப்-

www.padippakam.com



பகுதான் இனக்கலவரங்களும் போர் யுத்தக் களரிகளுமாகும். முத்தள்ளளவும் சனிபோல பூசுவா ஆட்சி முறை இருக்கும்வரை இதுவே நிலமை. மாறாது தீராது. இந்திய பாகிஸ்தான், இலங்கை பங்காளதேஸ், பர்மா போன்ற நாடுகளின் சுதந்திரத்திற்குப் பிந்திய வரலாறு, இன்னும் நமக்காகச் சொல்வதென்றால் உலகத்திலுள்ள பழைய காலனித்துவ நாடுகள் எல்லாமே நமக்காக நிறுவிக் காட்டுவதென்னவெனில் பூசுவாக்கள் ஒருபோதும் உண்மையான தேசிய ஐக்கியத்தையோ, அரசியற் சுதந்திரத்தையோ ஏற்படுத்த மாட்டார் கள் என்பதைத் தான்.

15. ஸ்டாலினிஸ்டுக்களாலும் திரிபுவாதிகளினாலும் தட்டி முதலாளித்துவத் தேசியவாதிகளாலும் பிடாரித்தனமான எதிர்ப்பினுள்ளும் இந்தக் கடமைகளைச் செய்துமுடிக்க வரலாறு பாட்டாளி வர்க்கத்தை மாத்திரந்தான் நம்பியுள்ளது. இந்த ஒரேயொரு சமூக சக்தியால் மாத்திரந்தான் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது பகற்கனவு அல்ல என்று ஆக்கமுடியும். பாட்டாளி வர்க்கம் இதைச் செய்துமுடிக்கும் பொழுது ஒரு பொழுதும் முதலாளித்துவத்தின் சகபாடியாகச் செய்யாது. மாறாகப் பரம எதிரியாகவே செய்து முடிக்கும். பாட்டாளிவர்க்கம் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையைத் தனது சொந்த ஆயுதத்தால், தனது சொந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கிராமப் புறங்களிலும் நகர்ப்புறங்களிலுமுள்ள ஒடுக்கப்பட்ட மக்களைத் தனக்குப் பிறகால் அணிதிரட்டியே செய்து முடிக்கும். தேசிய சுயநிர்ணய உரிமையைப் பாட்டாளி வர்க்கம் சோசலிசப் புரட்சியின் ஒரு பகுதியாகவே செய்து முடிக்கும். பாட்டாளி வர்க்கந்தான் தலைமைதாங்கி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நிர்மாணித்ததுடன் ஒடுக்கப்பட்ட எல்லாத் தேசிய இனங்களிற்கும் அவர்களுக்கு ஜனநாயக உரிமைகள் உத்தரவாதமாக்கப்படும், அது தேசிய

படிப்பகம்

www.padippakam.com



இனங்களிற்கு உண்மையான சமத்துவம் அளிப்பதன் உத்தர-வாதத்தின் பேரில், அது தாமே முன்வந்து ஒரு ஐக்கிய சோஷலிச சமஷ்டிக் குடியரசை அமைக்கும்படி அறைகூவும், ஒடுக்கப்-பட்ட தேசிய இனங்கள் தாமே முன்வந்து ஐக்கிய குடியரசு அமைக்கும் பட்சத்து ஒடுக்கப்பட்ட இனங்களின் பொருளாதார, கலாச்சார முன்னேற்றங்களுக்கு அதிக வாய்ப்புக்கிட்டுமென்று நம்பும் பாட்டாளிவர்க்கம் தனது சர்வாதிகாரத்தின் கீழ் பிரிந்து செல்ல விரும்பும் தேசிய இனங்கள் பிரிந்து செல்வதற்கு உறுதி அளிக்கும். ஐக்கிய தேசிய தமிழீழச் ஸ்ரீலங்காக் குடியரசு என்ற வேலைத்திட்டத்தையே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தன் வேலைத் திட்டத்தின் முக்கிய சாராம்சமாக முன்மொழிந்துள்ளது.

16 இலங்கை இந்திய ஆளும் வர்க்கத்தால் விலைக்கு வாங்-கப்பட்ட LSSP ஸ்டாலினிஸ்டுக்களே இந்தப் போராட்டத்-திலேயுள்ள பிரதான தடைக்கல்லாகும். அவர்களது ஜெய-வர்த்தன அரசோடான இராஜதந்திர ஐக்கியம் தனியரசைப் பாதுகாத்தல் என்ற தவிர்க்க முடியாத அரசியலின் வெளிப்பாடாகும். இந்த இரண்டு கட்சிகளுமே முதலாளித்துவத்திலிருந்து இம்மியும் சுயாதீனமானவையல்ல, கம்யூனிஸ்ட் கட்சியின் பாத்திரமா-னது ஸ்டாலினிசத்தின் பூரண வரலாற்றிலிருந்து வேரூன்றி வந்தது. LSSP தனது கடந்தகாலப் பாரம்பரியம் முழுவ-தையும் உதறித் தள்ளி விட்டது. என்ன சாபக்கேடோ தெரி-யவில்லை. கொல்வின் டீ. சில்வாவின் தேசிய இனம் பற்றிய கடந்தகால எழுத்துக்கள் மார்க்சிய இலக்கியத்தின் வளம் மிக்க தாரக மந்திரங்களாகும். இன்று அவையே அவராற் தலைமைதாங்கப்பட்டு வழிநடாத்தப்படும் கட்சியின் முழு அரசியலையும் குற்றக்கூண்டில் நிறுத்துகிறது. LSSP வண்டியிலே UNP குதிரையைப்பூட்டி டீ சில்வா இந்த

www.padippakam.com



நாட்டிலேயுள்ள படுபிற்போக்குச் சோவனிச அரசிற்கு மீண்டு கொடுத்துக் கொண்டிருக்கிறார். சிங்கள அரசைக் காப்பாற்ற வேண்டிய எந்தத் தேவையும் தொழிலாளி வர்க்கத்திற்கு இல்லை. தொழிலாளிவர்க்கத்தின் விருப்பத்திற்கு மாறாகச் செயற்பட்டு ஜெயவர்த்தன செய்த அத்தனை நெட்டூரங்களுக்கும் LSSP யும் சக பங்கை ஏற்க வேண்டும்.

7. அதற்கும் மேலாக இவர்கள் வடக்குக் கிழக்கில் இந்திய ஆக்கிரமிப்பை ஆடுசரணை இல்லாமல் வரவேற்பதானது ஒடுக்கப்பட்ட சிங்கள விவசாயிகளின் நியாயமான தேசிய வாஞ்சையை உதாசீனம் செய்வதாகும். இச் செயல்கள் அதிபிற்போக்கான JVP SLFP கரங்களைப் பலப்படுத்தியுள்ளது. இச் செயல்கள் குட்டிமுதலாளித்துவச் சனங்களின் கண்களிற்கு முன்னால் தொழிலாள வர்க்க இயக்கத்தைக் கொச்சைப்படுத்தி சிங்கள பேரினவாதத்தில் அடித்தளமமைத்த பாசிச இயக்கம் வளருவதற்கு துணைநிற்கும். இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிரானதும் ஸ்ரீலங்கா முதலாளித்துவத்திற்கு எதிரானதுமான வர்க்கப் போராட்டத்தோடு ஐக்கியப்படுவதற்குப் பதிலாக, இந்த வர்க்கப் போராட்டத்தினுள்ளே சிங்கள தமிழ் வெகுஜனங்களை ஜனநாயக ரீதியில் ஐக்கியப்படுத்தப் பிரயத்தனப்படாமல் LSSP இந்த நாட்டு ஒடுக்கப்பட்ட சனத்தொகையின் ஒரு பகுதியை விரோதிப்பதற்கு என்ன செய்ய முடியுமோ அத்தனையையும் செய்கிறது. இது இந்திய ஆக்கிரமிப்பை அழுத்தப்படுத்துவதோடு தமிழ் மக்களைப் பூண்டோடழிக்க ஒத்தாசை வழங்குவதோடு தெற்கிலே ஜெயவர்த்தனவின் ஒடுக்குமுறை நடவடிக்கைகளிற்கு ஆராதித்து ஆலவட்டம் வீசுகிறது. LSSP யின் அரசியலானது சோசலிச ஜனநாயக வேலைத் திட்டங்களின் அடிப்படையில் தொழிலாளி

படிப்பகம்

www.padippakam.com



வர்க்கத்தைச் சுயாதீனமாக அணிதிரட்டுவதை அடியோடு நிராக-
ரிக்கிறது.

18. நடந்து முடிந்த எல்லாச் சம்பவங்களுமே புரட்சிக் கம்-
யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டம் அனைத்தையும் மீண்டும்
மீண்டும் சரியென்பதையே நிரூபியுள்ளன. இது மாத்திரமே
வடக்கிலுள்ள தமிழ்த் தொழிலாளர்களதும், தெற்கிலுள்ள
தொழிலாளர்களதும் பாட்டாளிவர்க்கச் சர்வதேசிய மூலோ-
பாயத்தை ஸ்திரமாக உயர்த்திப் பிடித்தது. அதற்கும் மேலாகப்
போன வருடம் சக சகோதர இயக்கமான இந்தியாவின் சோசலி
சத் தொழிலாளர் கழகத்தோடு நெருக்கமாக இணைந்து பல
மில்லியன் இந்தியத் தொழிலாள வர்க்கத்திலுள்ளோரொக்கி-
யத்திற்காகப் போராடியது. இதுவுங்கூட இந்திய இலங்கைத்
தொழிலாளர்களின் தலைவிதியானது சிக்கறுக்க முடியாத மட்-
டத்திற்குப் பின்னிப் பிணைந்தது என்பதை உண்மை பூர்வ-
மாக விளக்கியதோடு, ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்-
டமானது இரண்டு தொழிலாளர்களினதும் இணைந்த போராட்-
டமென்பதையும் விளங்கியதன் பேரிலேயாகும்.

19 இந்த இக்கட்டான சூழ்நிலையிலே புரட்சிக் கம்யூனிஸ்ட்
கழகம் தனது சக்திகளை எவ்வளவு வேகமாகப் பரப்ப முடி-
யுமோ அவ்வளவு வேகமாகப் பரப்ப வேண்டும். UNPயுடன்
கூட்டுச் சேர்ந்துள்ள LSSP, CPக் கெதிரான போராட்டத்தை
உக்கிரப்படுத்த வேண்டும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
சரியாகக் கூறியாங்கு,

இங்கேயுள்ள ஒரே முன்னேறும் வழி, தொழிலாளி
வர்க்கத்தை முதலாளித்துவக் கட்சியிலிருந்து சுயாதீன-
மாக அணிதிரட்டி, வடகிழக்கு மாகாணங்களிலிருந்து
இந்திய இலங்கை ஆக்கிரமிப்புப் படைகளை அகற்றுவதோ

படிப்பகம்

www.padippakam.com



தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைக-
ளுக்கு உத்தரவாதம் அளிப்பதன் மூலம், சிங்கள, தமிழ்
பேசும் மக்களாலான சோசலிசக் குடியரசிற்கான
முன்னோக்கோடு UNP அரசாங்கத்தைத் தூக்கியெறியப்
போராட வேண்டும்.

20. இப் போராட்டத்தின் முக்கிய சக்தியாகப் புரட்சிக் கம்
யூனிஸ்ட் கழகம் தெற்கிலே முதலாளித்துவ வர்க்கத்திற்
கும், UNP க்கும் எதிரான தொழிலாளிவர்க்க நானாவித
போராட்டங்களிலே தன்னை அர்ப்பணிப்பதோடு, முன்னின்றுழைக்
கவும் வேண்டும். இன்று சீர்குலைந்து சின்னாபின்னப் பட்டுள்ள
உலக பொருளாதார நெருக்கடியினால் உந்தப்பட்டு உலகத்-
திலுள்ள திரிபுவாதிகளால் மறுக்கப்பட்ட தொழிலாளி வர்க்கம்
வரப்போகும் மாதங்களிலே புதிய தாக்குதலிற்குவரும்.
இந்தப் புதிய தாக்குதலின்போது சரியான புரட்சிகரக் கொள்-
கைகளினால் ஆயுதபாணியாகி, ஸ்ரீலங்காவினதும் முழு இந்திய
உபகண்டத்தினதும் முழு அரசியல் சூத்திரங்களையும் உரு-
மாற்ற வேண்டும். இன்று நாட்டுப் புறங்களிலே குழப்படி
செய்யும் J.V.P க்கு சக்தி LSSP-CP செய்த துரோகத்-
தின் அடிப்படையிலும் கிராமப்புறச் சனங்களின் பாதிப்பினா-
லும் உருவானதாகும். வர இருக்கும் கிளர்ச்சி எழுச்சியிலுள்ள
தொழிலாளி வர்க்கம் சிங்கள விவசாயிகளிற்கு நல்லதொரு
புதிய முன்னோக்கை வழங்கினால் JVP மண்ணோடு மண்ணாகும்.

21. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு புரட்சிக் கம்-
யூனிஸ்ட் கழகத்தின் கடந்த சில மாதங்களில் கட்டப்பட்
டதும் தாக்கத்தைத் தரவல்லதுமான வெற்றியை எண்ணித் திருப்-
திப்படுகிறது, அரசாங்கத்தினதும் சிங்கள இனவாதக் குண்-
டர்களின் ஒடுக்கு முறைக்கு மத்தியிலும் தொழிலாளர் வர்க்-

படிப்பகம்

www.padippakam.com



கத்திற்காகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மாத்திரந்தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தது. எவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலும் இது கொழும்பு கண்டி யாழ்ப்பாணத்தில் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு எதிராகச் செய்த வெற்றிகரமான பொதுக்கூட்டங்கள் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தமிழ் சிங்கள மக்களிடையே பேரா-தரவைப் பெறுகின்ற தென்பதும் தெற்கிலே LSSP, CP கட்சிகளிலிருந்தும், வடக்கிலே புலி இயக்கத்திலிருந்தும் சக்திகளை வெற்றிகொள்கின்ற தென்பதையே காட்டுகிறது. இந்த வெற்றியின் தாற்பரியந்தான் அண்மையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முக்கிய அங்கத்தவர்களை, பொதுச் செயலாளரின் சகோதரன் உட்பட நவம்பர் 12ந் திகதி கொழும்பிலே கொலை செய்ய முயற்சித்தது காட்டுகிறது. மீண்டும் ஸ்ரீலங்காத் தொழிலாள வர்க்கத்தினுள்ளே றொக்சியத்தின் ஆதிக்கம் உதித்தெழுவதற்கு ஸ்ரீலங்கா முதலாளித்துவம் பயப்படுவதே அண்மையில் JVP, RCL ஐ கொல்வதாகப் பயமுறுத்தியதன் காரணமாகும். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இந்தத் தாக்குதல்களையும் மிரட்டல்களையும் மிகுந்த பாதுகாப்பு முன்னடவடிக்கைகளோடு எதிர் கொள்ள வேண்டும். குறிப்பாக தொழிலாளி வர்க்கத்தினுள் புரட்சிகர வேலைகளை மேலும் உக்கிரமாக்க வேண்டும்.

இந்தியப்படையே தமிழீழத்தை விட்டு வெளியேறு
தமிழீழ விடுதலையைக் கையளி.

காந்தி ஜெயவர்த்தன ஒப்பந்தம் ஒழிக.

படிப்பகம்

www.padippakam.com




சோசலிசத் தமிழீழ, சோசலிச ஸ்ரீலங்கா ஐக்கிய அரசுக்காகப் போராடுவதற்கு தமிழ் சிங்களத் தொழிலாளர்களை ஐக்கியப் படுத்து.

தமிழ் சிங்களப் பாட்டாளிகளின் முன்னணிப் படையான புரட்சிக் கம்யூனிஸ் கழகம் நீடு வாழ்க.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நீடு வாழ்க.

படிப்பகம்

www.padippakam.com




*This pamphlet can be ordered from*

***Neue Arbeiterpresse***
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West-Germany*

**Pour commander, écrire à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

Please pay DM 1,50 + DM 0,50 postage
to account no. 211 85 – 431, Postgiroamt Essen

படிப்பகம்

www.padippakam.com

புரட்சிக் கம்யூனிஸ்ட்
கழகத்தின் முன்நோக்கும்
பணிகளும்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்
குழுவின் அறிக்கை 10-10-1986

1,-DM

This pamphlet can be ordered from

**Neue Arbeiterpresse**
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

**Pour commander, écrire à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

*Please pay DM 1,- plus DM 0,50 postage*
*to account no. 2 11 85 – 431,*
*Postgiroamt Essen*

படிப்பகம்

www.padippakam.com


# Subscribe to Tholilalar Pathai

*Have it posted.*
*20 issues: DM 26,-*

*Write to:*
*Neue Arbeiterpresse*
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West Germany*

**Ecrirc à**
**Marxisme Révolutionnaire**
**B.P. 388**
**75626 Paris Cedex 13**

*Subscription payable to*
*account no. 211 85-431, Postgiroamt Essen*
*(effected at any post office)*

***Fund***

***In order to reprint and circulate** Tholilalar Pathai **regularly in Germany we need your financal support. Please send donations to Postgirokonto "Neue Arbeiterpresse", B. Rippert, Nr. 211 85-431 Postgiroamt Essen. Note " Tamil Paper"***
***All incoming money in excess of the printing costs will be used to support the RCL in Sri Lanka.***


படிப்பகம்

www.padippakam.com


# Subscribe to
# Fourth International

*"Fourth International" is the quarterly magazine of the International Comittee of the Fourth International.*




*single issue DM 10,-*




*single issue DM 18,-*
*Subscription DM 50,-*

*Order from*
***Arbeiterpresse Verlag***
*Alfredstr. 71*
*D-4300 Essen 1*
*West Germany*


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்